**இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு.ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப.,**

ந.க.அ3/31438/2022 நாள்: 18 .11.2022.

பொருள் கருணை அடிப்படையில் பணிநியமனம் – இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு – சதீஸ் (திரு).ப. – கிராம நிர்வாக அலுவலர் – புளியங்குடி குரூப் – முதுகுளத்தூர் வட்டம் – 06.12.2017 அன்று பணியிடையே காலமானது – அவரது மனைவி திருமதி.எம்.ஜெயசிந்தியா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கி உத்தரவிடல்.

பார்வை
1. முதுகுளத்தூர் வட்டாட்சியரின் கடிதம் ந.க.அ3/95/2016, நாள் 21.05.2018
2. திருமதி.ஜெயசிந்தியா, க/பெ.(லேட்)சதீஸ் என்பவரது விண்ணப்பம் நாள்–09.12.2017
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ 1) துறை, நாள்: 23.01.2020.
4. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.பணி 4(1)/02–44/1/2022, நாள்: 05.07.2022.

--00--

**உத்தரவு:**

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில், முதுகுளத்தூர் வட்டம், புளியங்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்த திரு.ப.சதீஸ் என்பவர் பணியிடையில் 06.12.2017 அன்று காலமாகிவிட்டார். காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் மனைவி திருமதி.எம்.ஜெயசிந்தியா என்பவர் தனக்கு பணி நியமனம் வழங்க கோரி பார்வை 2–ல் காணும் கடிதம் மூலம் மனு அளித்துள்ளார். தனியரின் கோரிக்கையை ஏற்று, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் முன்னுரிமைப் பதிவேட்டில் முதுநிலை வரிசை எண்.115–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2) பார்வை 4-ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில், 2022-2023-ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கையில், இராமநாதபுரம் மாவட்டத்தில், இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 04 பணியிடங்களை கருணை அடிப்படையில் நிரப்பிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தனியருக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்தில் தற்காலிகமாக பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி | பணி ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகம் |
|---|---|
| திருமதி.எம்.ஜெயசிந்தியா,<br>க/பெ.(லேட்)சதீஸ்,<br>67, E.B. மெயின் ரோடு<br>பைக்காரா,<br>மதுரை – 625 004 | இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>"அ" பிரிவு,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>இராமநாதபுரம்.<br><br>(காலியாக உள்ள பணியிடத்தில்) |

3) இந்த பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. தனியரது பணி நியமனம் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் அரசினால் பணி வரன்முறை செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.

4) தனியர் தனக்கு வழங்கப்பட்ட பணியிடத்தில் பணியேற்கும் முன்னதாக இவரது வசிப்பிடத்தின் எல்லைக்குட்பட்ட காவல்துறை அலுவலரிடமிருந்து தனது ஒழுக்கம் மற்றும் முன்வரலாறு குறித்த சான்று ஒன்றினைப் பெற்று நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தனது உடற்தகுதி குறித்த சான்று ஒன்றினையும் உரிய மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்றும் சமர்ப்பித்திட வேண்டும்.

5) மேலும், தனியர் சமர்ப்பித்துள்ள சான்றுகள் மற்றும் தெரிவித்துள்ள விபரங்களில் ஏதேனும் எதிர்மறையான அறிக்கை பெறப்படின் இந்த பணி நியமனம் இடைமுறிவிற்கு உட்பட்டது எனவும், இது குறித்து தனியர் மீது முறையான ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்வதற்கு உட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18/11/22

மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

பெறுநர்:
திருமதி.எம்.ஜெயசிந்தியா,
க/பெ.(லேட்)சதீஸ்,
67, E.B. மெயின் ரோடு
பைக்காரா,
மதுரை – 625 004

17/11/22

நகல்: உதவி ஆட்சியர், பரமக்குடி
நகல்: வட்டாட்சியர், முதுகுளத்தூர்.
நகல் தலைமை உதவியாளர், "எச்" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்.
நகல்: முகாம் எழுத்தர், மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்.
நகல்: "அ8" உதவியாளர்.
நகல் பதிவுரு எழுத்தர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்.
நகல்: "அ3" உதவியாளர் (இருப்புக் கோப்பிற்கு).